## உப்பிட்ட வார்த்தைகள் 1

# நெடுந்துயில்



அன்பிற்குரிய உதயம் வாசகர்களுக்கு,

கடல்கடந்து ஏதேதோ தேசங்களில் வாழ்ந்தபடியே தமிழ் சமூகத்தின் அரசியல் மற்றும் கலச்சார மாற்றங்கள் குறித்து ஆழ்ந்த கவனத்தோடும் அக்கறையோடும் செயல்பட்டுவரும் உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்.

என்னை சுற்றிய உலகம் தான் எனது எழுத்தின் ஊற்றுக்கண். உங்களோடு உப்பிட்ட வார்த்தைகள் என்ற புதிய பத்தியின் வழியாக சமகால வாழ்வு சார்ந்த எனது அக்கறைகள், அவதானிப்புகள், கேள்விகள் சிலவற்றை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் .

மௌனத்திலிருந்து உரையாடலை நோக்கியும் உரையாடலில் இருந்து மௌனத்தை நோக்கியும் நகரும் முயற்சி இது.

மிக்க அன்புடன்
எஸ்.ராமகிருஷ்ணன்
சென்னை

**வாழ்வு கற்றுக்** கொடுப்பதை விட அதிகமாக மரணம் நமக்கு கற்றுக் கொடுக்கிறது. வாழ்வு குறித்த ஆயிரமாயிரம் போதனைகளை, நீதிநெறிகளை சாவு ஒரு நிமிசத்தில் திருத்தி எழுதி விடுகிறது. இறந்து போனவர்களைப் பற்றி பேசுகையில் எங்கள் பகுதியில் நினைவில் வாழ்பவர்கள் என்று சொல்வார்கள். சில குடும்பங்களில் ஆண்டு தோறும் துக்கம் அனுஷ்டிக்கும் தினங்களில் நினைவில் வாழ்பவர்களுக்குக் கூட புத்தாடை எடுத்து படையல் செய்வார்கள். நம்மோடு உடன் வாழ்பவர்களையே நாம் கவனிப்பதில்லை. காது கொடுத்து கேட்பதில்லை. இதில் நினைவில் வாழ்பவர்களைப் பற்றி கேட்கவா வேண்டும்.

நினைவில் வாழ்பவர்கள் பற்றி எப்போதுமே என் மனம் யோசித்துக் கொண்டேயிருக்கிறது. பழமையான கோவிலுக்கோ, இடிபாடுள்ள கட்டிடங்களுக்கோ உள்ளே நுழைகையில் ஆயிரமாயிரம் கண்கள் தீண்டிச் சென்ற இடமல்லவா என்று மனது பரபரப்படைகிறது. கடற்கரையில் பின்னிரவில் நடக்கையில் எத்தனை ஆயிரம் மனிதர்கள் மிதித்து நடந்த மணல், எவ்வளவு கனவுகள் உதிர்ந்த இடமிது என்று தோன்றுகிறது. வீட்டின் முன் உள்ள விருட்சத்தை காணுகையில் இது என் குடும்பத்தின் இரண்டு தலைமுறை கண்டிருக்கிறதே என்று பொறாமையாக இருக்கிறது.

ஆகாசத்தில் உள்ள நட்சத்திரங்களை விடவும் அதிகமில்லையா பூமியில் வாழ்ந்து மறைந்தவர்கள். கபிலனும் பரணரும் ஆண்டாளும் இளங்கோவடிகளும், கம்பனும் சித்தர்களும் பாடி கடந்த போன நிலப்பரப்பைத் தானே எனது பாதங்கள் கடந்து கொண்டிருக்கின்றன. என்றால் நான் தனிமனிதனில்லை. எனது நிலப்பரப்பும் மொழியும் அதன் தொன்மையை என் உடலில் ஏற்றியிருக்கின்றன. என் நாவு இரண்டாயிரமாண்டு கடந்த ஒரு மொழியைத் தான் உச்சரித்து கொண்டிருக்கிறது. என் நிலம் ஆயிரமாயிரம் மனிதர்கள் தங்கள் ஆசைகளை விதைத்து சென்ற விளைநிலம். நினைவுகள் என்ற சொல்லின் ஆழத்தில் புதையுண்டிருக்கின்றது மூதாதையர்களின் இருண்ட வாழ்வு.

இன்று சாவை வெறும் எண்ணிக்கையாக்கி கொண்டிருக்கின்றன ஊடகங்கள். சாவின்

**எஸ்.ராமகிருஷ்ணன்**

வலியைக் கூட ஆற்றுப்படுத்திக்கொள்ள முடியாமல் வாழ்வு தரும் நெருக்கடி மனிதனை தன் வாழ்விடத்திலிருந்து துரத்திக் கொண்டிருக்கிறது. புகலிடம் தேடி வாழ்பவர்களில் பலரும் தொண்டைக்குழிக்குள் துக்கத்தை ஒளித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்களே.

எப்போதாவது கிராமத்திற்குத் திரும்பி செல்கையில் கவனிப்பாரற்று போன புதைமேடுகள் கண்ணில் படுகின்றன. அதில் காய்ந்த வேலிமுட்களும் கிழிந்த முட்டு துணிகளும் அப்பிக் கிடக்கின்றன. ஒரு மண்புழு கூட அங்கே செல்வதில்லை. நிசப்தம் மட்டுமே ஊற்று எடுத்துக் கொண்டிருக்கிறது.

இறந்தவர்களின் நிர்கதி வாழ்பவர்களின் நிர்கதியை தான் பிரதிபலித்து கொண்டிருக்கிறதா?

சிறுவயதில் மீன்பிடிக்க செல்கையில் தூண்டில் புழு வேண்டி சாக்கடைப் பகுதியில் தோண்டி மண்புழு எடுப்போம். அப்படி மண்புழு கிடைக்காமல் ஒரு நாள் நண்பன் வீட்டின் தென்னையடியில் இருந்த மண்ணைத் தோண்டி மண்புழு எடுக்கையில் நண்பனின் அக்கா வேகமாக ஒடி வந்து எங்களை திட்டிவிட்டு அந்த மண்புழுவை வாங்கி ஈரமண்ணில் விட்டாள்.

நாங்கள் தோண்டிய இடத்தில் அந்த வீட்டில் பிறந்து இரண்டு வயதில் இறந்து போன ஒரு பெண்குழந்தையை புதைந்திருக்கிறார்கள் என்றும் அவள் தான் இந்த மண்புழுவாகி இருக்கிறாள் என்றும் அக்கா சொன்னாள். இறந்த பின்னும் மண்ணோடு உள்ள ஸ்நேகம் அழிந்துவிடாது போலும்.

சில வேளைகளில் கண்ணீரை பற்றி யோசித்திருக்கிறேன். அழுவது எவ்வளவு பெரிய விடுதலையில்லையா? அழுகை இல்லாமல் போயிருந்தால் துயரங்கள் என்னவாகியிருக்கும். புரையோடி போய் சீல் வைத்த காயங்களை போல உடலை துக்கம் அமுக்கிவிட கூடும் இல்லையா? அழுகையும் கண்ணீரும் நம் விருப்பத்தில் உருவாகின்றவையல்ல. அழுவதுதற்கு காரணங்களும் தேவையானதில்லை. ஈரத்துணி காற்றில் மெல்ல உலர்வதை போல மனது துயரிலிருந்து விடுபடுவதற்கு கண்ணின் வழியாக தன்னை சுத்தம் செய்து கொள்கிறது.

கண்ணீன் தூய்மை மிக அலாதியானது. அது இதயத்தின் ஆழத்திலிருந்து கசிந்து வருகிறது. கண்ணீர் ஒரு ரகசிய உரையாடல். கண்ணீர் ஒரு சங்கீதம். கண்ணீர் ஒரு ஆயுதம். ஒரு துளி கண்ணீர் ஓராயிரம் வார்த்தைகள் சாதிக்க முடியாததை வெற்றி கொண்டுவிட முடியும். அழுவது பெண்களுக்கு மட்டுமே உரியதுமில்லை பலவீனமானதுமில்லை. அழுகைக்கு பின்பு கவிழும் நிசப்தம் கண்டிருக்கிறீர்களா. அது விளக்க இயலாத தன்னிலை.

இன்று நுகர்வு கலாச்சாரம் அழுகையை கூட தனது வணிக பொருளாக்கிவிட்டது. மலினமாக தந்திரமாக கண்ணீர் உபயோகபடுத்தப்படுகிறது. அழுகையில் கூட இன்று அரசியலிருக்கிறது.
மாநகர வாழ்வு சாவை வெறும் சடங்காக மட்டும் மாற்றி வைத்திருக்கிறது. ஒரு விபத்தை போல எதிர்பாராத நிகழ்வு என்பதை தாண்டி எவ்விதமான முக்கியத்துவமில்லை. சில வாரங்களுக்கு முன்பு நண்பர் ஒருவரின் தந்தை இறந்து போய்விட்டார் என்று தகவல் கேள்விப்பட்டு அருகாமையில் உள்ள அவரது வீட்டிற்கு சென்றிருந்தேன்

நண்பர் ஒரு அடுக்குமாடி வீட்டின் ஆறாவது தளத்தில் குடியிருந்தார் . காலை ஆறரை மணியிருக்கும்.. சாவு செய்தி அறிந்து வருகின்றவர்கள் அதிகம் வர ஆரம்பத்ததால் லிப்டிற்காக நெருக்கி அடித்து காத்து கொண்டிருந்தார்கள். சிறிய லிப்டில் நாலு பேருக்கு மேல் மாடிக்கு போக முடியவில்லை

படியேறி மேலே சென்றபோது அந்த வீட்டில் டிவி ஓடிக்கொண்டிருந்தது. சிறுவர்களும் ஒன்றிரண்டு வயதானவர்களும் காலை செய்தி பார்த்து கொண்டிருந்தார்கள். அழுகை சப்தமில்லை. வயதான ஒரு மனிதன் உடல் பாயில் கிடத்தப்பட்டிருந்தது. இரண்டு மூன்று பெண்கள் ஆங்காங்கே அமர்ந்திருந்தார்கள். ஆங்கில பேப்பர் ஒன்று பாதி படித்தபடியே அருகில் கிடந்தது.

ஒரு பெண் பெருமூச்சு வாங்க மாடியேறி வந்து வீட்டின் பிரிட்ஜில் இருந்து ஐஸ் வாட்டர் வாங்கி குடித்தாள். ஆளுக்கு ஆள் செல்போனில் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். சில நிமிசங்களில் உடலை பாதுக்கும் பெட்டி வந்தது. அதில் வயதானவரை தூக்கி வைத்தார்கள். துக்கம் கேட்க வந்தவர்கள் தங்கள் வீட்டு வாசல் முழுவதும் செருப்பை போட்டு இருக்கிறார்கள் என்று அருகாமை வீட்டுக்காரன் கத்திக் கொண்டிருந்தான்.

வீட்டிலிருந்தவர்கள் ஒன்றரை லிட்டர் கோக் பாட்டில் ஒன்றிலிருந்து ஆளுக்கு ஒரு வாய் குடித்து கொண்டிருந்தார்கள். ஆட்டோ கட்டணம் உயர்த்தப்பட்டது. பட்ஜெட்டில் மாநில நிதி ஒதுக்கிடு. டிவியில் ஆரம்பமாக உள்ள புதிய ஷோ என்று பரபரப்பாக பலரும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒன்றிரண்டு மணிநேரம் ஆட்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். அதன்பிறகு ஒரு பிரச்சனை எழுந்தது.

இறந்து போனவர் உடலை லிப்டில் வைத்து கிழே கொண்டு போக முடியாது. அதே நேரம் படிகளில் இறங்கி போவதாக இருந்தால் மிக குறுகலான படியமைப்பு இருக்கிறது. அவரை எப்படி கிழே கொண்டு போவது என்று தெரியவில்லை. வேறுவழியில்லாமல் பெட்டியை ஒரு கயிற்றில் கட்டி மாடியில் இருந்து கிழே தொங்கவிட்டு பிடித்துக்கொள்ளவேண்டியது என்று முடிவு செய்தார்கள். அதன்படியே நாலு பேர் கயிற்றை கட்டி அந்த பெரியவரின் உடலை மாடியிலிருந்து தொங்க விட்டார்கள்.

பத்து பேர் கிழே இருந்தபடியே இந்த பக்கம் அந்த பக்கம் என்று குரல் கொடுத்தார்கள். கிணற்றில் தண்ணீர் எடுக்க வாளியை விடுவது போல மெதுவாக அந்த உடலை மாடியிலிருந்து கிழே இறக்கினார்கள். சாலையில் போகின்ற வருகின்றவர்களுக்கு எல்லாம் இதை பார்க்க வேடிக்கையாக இருந்தது. எனக்கோ அபத்த நாடகத்தின் உச்சபட்ட காட்சிபோலிருந்தது.

உடல் கிழே வர வர பலரும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள். ஒரு ஆள் வெளிப்படையாகவே உங்கப்பா செத்து போயி சூப்பர்மேன் மாதிரி பறக்க ஆரம்பிச்சிட்டாரு என்று சொன்னா. சிலர் சிரித்தார்கள், பிறகு ஒரு அமரர் ஊர்தியை வர வழைத்து அதில் ஏற்றி கொண்டு போனார்கள். மாநகர பதிவேட்டிலிருந்து ஒரு மனிதன் நீக்கப்பட்டு போனான். இவ்வளவு தான் வாழ்க்கை அவனுக்கு தரும் அவகாசம்.
வெளியே வருகையில் அடக்கப்பட்ட துக்கம் தான் நம் காலத்தின் பிரதான உணர்ச்சி வெளிப்பாடோ என்று தோன்றியது. நிஜம் தானில்லையா?

---

# பல்துறை...

பக்கம் 21லிருந்து

செல்வராசன், புதுமைப்பித்தனின் கதைகளைப் படித்துக்கொண்டிருந்தார். வழக்கம்போல நாமிருவரும் புத்தகங்களைப் பரிமாறிக்கொண்டபொழுது புதுமைப்பித்தன் மாப்பஸானின் கதைகள் சிலவற்றை தழுவியிருப்பதைக்கவனித்தோம். தற் பிக் ஒ.்வ் ஏ மோரின் (That pig of a morin) என்ற கதையை புதுமைப்பித்தன் அந்த முட்டாள் வேனு என்ற பெயரில் எழுதியிருந்தார்.

**கேள்வி:-** இதே குற்றச்சாட்டைத்தான் பல வருடங்களுக்கு முன்பு சிட்டி சுந்தரராஜன் சுபமங்களா பேட்டியில் குறிப்பிட்டிருந்தார். அதனைப்படித்து வெகுண்டெழுந்த சிதம்பர ரகுநாதன் காரசாரமாக பதில் அளித்தார். அத்துடன் நின்றுவிடாமல் புதுமைப்பித்தன் எவரையும் தழுவி எழுதவில்லை என்பதை நிரூபிப்பதற்காக விரிவான புத்தகம் ஒன்றும் எழுதினார். இப்பொழுது புதுமைப்பித்தனும் இல்லை, சிதம்பர ரகுநாதனும் இல்லை, சிட்டி சுந்தரராஜனும் இல்லை. நீங்கள் மீண்டும் சர்ச்சையைக்கிளப்பியிருக்கிறீர்கள்.

**பதில்:-** சர்ச்சைக்காகச் சொல்லவில்லை, படித்தைத்தான் சொல்கிறேன்.அக்காலகட்டத்தில் ஒவ்வொரு சம்பள நாளிலும் ஆங்கிலப் புத்தகங்களை வாங்கும் பழக்கம் என்னிடமிருந்தது. சிக்மண்ட் ்.பிரைய்டின் 23 அல்லது 26 விரிவுரைகள் அடங்கிய Interpretation Of Dreams என்னும்நூலையும் விலைகொடுத்து வாங்கிப் படித்தேன். அதன் மூலமாக மனவியல் கலை பற்றி அறிந்துகொண்டேன். இதன் உந்துதலால் எழுதப்பெற்ற கதைதான் -ஒரு சொல்- அதுவே வீரகேசரியில் வெளியான எனது முதல்கதை. நான் அக்கதையை அனுப்பி எப்பொழுது பிரசுரமாகும் எனக்காத்திருந்தேன். சுமார் இரண்டு மாதம் கழித்து அக்கதை பிரசுரமாகியிருந்தது. யாழ் ரயில் பயணத்தின்போது அதனைப்படித்துக்கொண்டு போனேன். அச்சமயம் எனக்கு ஏற்பட்ட புளகம் இருக்கிறதே, அது இன்றும் மனதில் நிலைத்து நிற்கிறது.

**கேள்வி:-** ஆக்க இலக்கியத்துறையிலிருந்து வானொலி, தொலைக்காட்சி, சினிமா என்று தொடர்பயணம் சென்றவர் நீங்கள், அந்த அனுபவங்கள் எப்படி?

**பதில்:-**நான் இலங்கைப் பத்திரிகைகளில் எழுதிக்கொண்டிருந்தவேளையில் இலங்கை வானொலியில் -கலைக்கோலம்- நிகழ்ச்சியை நடத்தித்தருமாறு அப்போதைய தயாரிப்பாளர் ராஜசுந்தரம் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அந்த நிகழ்ச்சியிலே கலை, இலக்கியம், சினிமா, ஓவியம் முதலான பல அம்சங்கள் விமர்சிக்கப்பட்டன. இதன் பின்னர் நாடகம், சினிமா, தொலைக்காட்சி நாடகம் முதலான துறைகளிலெல்லாம் ஈடுபட்டேன். எனது ஆக்கங்கள் சிறிய தொகையினவேயாயினும் அவற்றால் ஏற்பட்ட தாக்கங்கள் பெரியன. ஊதாரணத்திற்கு பொன்மணி- திரைப்படத்தை எடுத்துக்கொள்ளலாம். அத்திரைப்படம் நிதி வருவாயில் எனது மைத்துனர் முத்தையா ராஜசிங்கம் அவர்களுக்கு கை நட்டத்தை ஏற்படுத்தியிருந்தபோதிலும் இன்று வரை பாராட்டப்படும் ஈழத்துத் தமிழ்த்திரைப்படமாக விளங்குகிறது. கடந்த ஆண்டு லங்காதீப பத்திரிகையிலும் சரசவிய திரைப்படவிழா சிறப்பு மலரிலும் பொன்மணி குறித்து சிலாகித்து எழுதியிருந்தார்கள். இவ்வளவுக்கும் காரணம் சரியான காலத்தில் சரியான நண்பர்களின் சகவாசம்தான். அவர்கள் எனது ஆற்றலை இனம்கண்டனர்.

சிறுகதையில் தொடங்கிய எனது எழுத்து, விமர்சனம், வானொலிக்கலை, நாடகம்,சினிமா, தொலைக்காட்சி எனப்பல்வேறு திசைகளில் கிளைவிட்டதை இப்போது நினைத்துப்பார்க்கிறேன். இப்பொழுது நான் அவுஸ்திரேலியப் பிரஜையாகிவிட்டேன். எனது மகள் தீமதி என் வாழ்க்கை வரலாற்றை எழுதும்படி நச்சரித்து வருகிறாள்.

இங்கு வந்த பின்னர் என்னைக்காணும் பல நடுத்தர வயதினர் நீங்களா காவலூர் ராசதுரை முன்னர் உங்கள் கதைகளைப்படித்திருக்கிறேன், உங்கள் வானொலி நிகழ்ச்சிகளை தவறாமல் கேட்பேன் என்றெல்லாம் பாராட்டக் கேட்டிருக்கின்றேன்.